# நம்மாழ்வார் அருளிச் செய்த
# யஜுர் வேத ஸாரமான
# திருவாசிரியம்

---

## தனியன்

### அருளாளப் பெருமாள் எம்பெருமானார் அருளிச் செய்தது

காசினியோர் தாம் வாழக் * கலி யுகத்தே வந்துதித்து *
ஆசிரியப் பா அதனால் * அருமறை நூல் விரித்தானைத் *
தேசிகனைப் பராங்குசனைத் * திகழ் வகுளத் தாரானை *
மாசடையா மனத்து வைத்து * மறவாமல் வாழ்த்துதுமே

---

## நம்மாழ்வார் அருளிச் செய்த
## யஜுர் வேத ஸாரமான
## திருவாசிரியம்

** செக்கர் மா முகில் உடுத்து மிக்க செஞ்சுடர்ப்
பரிதி சூடி * அஞ்சுடர் மதியம் பூண்டு *
பல சுடர் புனைந்த பவளச் செவ்வாய் *
திகழ் பசுஞ்சோதி மரதகக் குன்றம் *
கடலோன் கை மிசைக் கண் வளர்வது போல் *
பீதக ஆடை முடி பூண் முதலா *
மேதகு பல்கலன் அணிந்து * சோதி
வாயவும் கண்ணவும் சிவப்ப * மீதிட்டுப்
பச்சை மேனி மிகப் பகைப்ப *
நச்சு வினைக் கவர் தலை அரவின் அமளி ஏறி *
எறி கடல் நடுவுள் அறி துயில் அமர்ந்து *
சிவன் அயன் இந்திரன் இவர் முதல் அனைத்தோர் *
தெய்வக் குழாங்கள் கை தொழக் கிடந்த *
தாமரை உந்தி தனிப் பெரும் நாயக! *
மூவுலகளந்த சேவடியோயே! 1

உலகு படைத்து உண்ட எந்தை * அறை கழல்
சுடர்ப் பூந்தாமரை சூடுதற்கு * அவாவார்
உயிர் உருகி உக்க * நேரிய காதல்
அன்பில் இன்பீன் தேறல் * அமுத
வெள்ளத்தான் ஆம் சிறப்பு விட்டு * ஒரு பொருட்கு
அசைவோர் அசைக * திருவொடு மருவிய
இயற்கை * மாயாப் பெரு விறல் உலகம்
மூன்றினொடு நல் வீடு பெறினும் *
கொள்வது எண்ணுமோ தெள்ளியோர் குறிப்பே? 2

குறிப்பில் கொண்டு நெறிப் பட * உலகம்
மூன்றுடன் வணங்கு தோன்று புகழ் ஆணை *
மெய் பெற நடாய தெய்வம் மூவரில்
முதல்வனாகி * சுடர் விளங்ககலத்து *
வரை புரை திரை பொரு பெரு வரை வெருவர *
உரு முரல் ஒலி மலி நளிர் கடல் படவர
வரசுடல் தட வரை சுழற்றிய * தனி மாத்
தெய்வத்து அடியவர்க்கு இனி நாம் ஆள் ஆகாவே
இசையும் கொல்? * ஊழி தோறூழி ஓவாதே 3

ஊழி தோறூழி ஓவாது * வாழிய
என்று யாம் தொழ இசையும் கொல்? *
யாவகை உலகமும் யாவரும் இல்லா *
மேல் வரும் பெரும் பாழ் காலத்து * இரும் பொருட்கு
எல்லாம் அரும் பெறல் தனி வித்து * ஒரு தான்
ஆகித் தெய்வ நான்முகக் கொழு முளை
ஈன்று * முக்கண் ஈசனொடு தேவு பல
நுதலி * மூவுலகம் விளைத்த உந்தி *
மாயக் கடவுள் மா முதல் அடியே 4

மா முதல் அடிப் போதொன்று கவிழ்த்து அலர்த்தி *
மண் முழுதும் அகப்படுத்து * ஒண் சுடர் அடிப் போது
ஒன்று விண் செலீஇ * நான்முகப் புத்தேள்
நாடு வியந்து உவப்ப * வானவர் முறை முறை
வழிபட நெறீஇ * தாமரைக் காடு
மலர்க் கண்ணொடு கனி வாய் உடையது
மாய் * இரு நாயிறு ஆயிரம் மலர்ந்தன்ன *
கற்பகக் காவு பற்பல அன்ன *
முடி தோள் ஆயிரம் தழைத்த *
நெடியோய்க்கு அல்லதும் அடியதோ உலகே? 5

ஓஓ! உலகினது இயல்வே! * ஈன்றோள் இருக்க
மணை நீராட்டி * படைத்து இடந்து உண்டு உமிழ்ந்து
அளந்து * தேர்ந்து உலகளிக்கும் முதற் பெரும்
கடவுள் நிற்ப * புடைப் பல தான் அறி
தெய்வம் பேணுதல் * தனாது
புல் அறிவாண்மை பொருந்தக் காட்டி *
கொல்வன முதலா அல்லன முயலும் *
இனைய செய்கை இன்பு துன்பளி *
தொல் மா மாயப் பிறவியுள் நீங்கா *
பல் மா மாயத்து அழுந்துமா நளிர்ந்தே 6

** நளிர் மதிச் சடையனும் நான்முகக் கடவுளும் *
தளிர் ஒளி இமையவர் தலைவனும் முதலா *
யாவகை உலகமும் யாவரும் அகப்பட *
நிலம் நீர் தீ கால் சுடர் இருவிசும்பும் *
மலர் சுடர் பிறவும் சிறிதுடன் மயங்க *
ஒரு பொருள் புறப்பாடின்றி முழுவதும்
அகப்படக் கரந்து * ஓர் ஆலிலைச் சேர்ந்த எம்
பெரு மா மாயனை அல்லது *
ஒரு மா தெய்வம் மற்றுடையமோ யாமே? 7

**அடிவரவு:** செக்கர் உலகு குறிப்பு ஊழி மாமுதல் ஓஓஉலகு நளிர் முயற்றி

**நம்மாழ்வார் திருவடிகளே சரணம்**